1982 மார்ச் 1

## தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டுவசதி வளர்ச்சிக் கழகம் மூலம் கட்டப் பெறும் வீடுகள்.

*வினா எண். 300— திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு அரிசன வீட்டுவசதி வளர்ச்சிக் கழகம் மூலம் கட்டித்தரப்படும் வீடுகளுக்கு இடம் எந்த அடிப்படையில் தேர்வு செய்யப்படுகிறது?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: அரசு புறம்போக்கு நிலங்களிலும், மற்றும் புறம்போக்கு நிலம் இல்லாத இடத்தில் இதற்காக கையகப்படுத்தப்பட்டு பட்டா வழங்கிய வீட்டு மனைகளில் தான் தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி வளர்ச்சிக் கழகம் மூலமாக வீட்டு வசதி அளிப்பது அரசின் கொள்கையாகும். மேற்படி பட்டா வழங்கிய வீட்டுமனைகள் உள்ள கிராமங்களில் பட்டியல் ஒன்று (மாவட்டம் வாரியாக) ஆதி திராவிடர் மற்றும் ஆதிவாசிகள் நலத்துறை இயக்கு நரிடமிருந்து பெற்று, அந்தப் பட்டியலிலிருந்து வீடுகள் கட்டும் கிராமங்கள் தேர்வு செய்யப்படுகின்றன.

திரு. ஜே. எஸ். இராசு: சட்டப்பேரவைத் தலைவரவர்களே தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வீட்டுவசதி வளர்ச்சிக் கழத்தின் மூலமாக இனாமாக வீடு கட்டித் தரப்படும் என்ற அந்தத் திட்டம் தொடருமா என்று அண்மையில் திருச்சிக்கு வந்திருந்த மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் கேட்டார்கள். அதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் கலைஞர் கொண்டு வந்த இந்தத் திட்டம் நல்ல திட்டம்தான். ஆனால் என்னிடம் பணம் இல்லை, ஆகவே இதை நிறைவேற்றப்போவதில்லை என்று உறுதியாகவே தெரிவித்தார்கள். ஆகவே இந்தத் திட்டம் தற்போது என்ன நிலைமையிலே இருக்கின்றது, தொடருமா, அல்லது நிறுத்தப்படுமா என்ற விவரங்களை அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா?

(முற்பகல் 10–30)

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலவச வீடுகளை தமிழகத்தில் இருக்கக் கூடிய அனைத்து ஆதி திராவிட மக்களுக்கும் கட்டிக்கொடுக்க வேண்டும் என்ற அடிப்படையில்தான் இந்தத் திட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. ஆனால், எல்லோருக்கும் இந்தப்பயன் கிடைக்க வேண்டும் என்ற உணர்வோடு இந்த அரசு தொடர்ந்து

செயலாற்ற முனைந்தபோது, ஏறக்குறைய 207 சதுர அடி பரப்பளவுள்ள இடத்தில் அந்த வீடுகளை, சுமார் ரூபாய் 10,000-க்கு மேலாக, 15,000-க்குள்ளாக உள்ள செலவில்தான் இந்தத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் என்ற தெரிந்தது. அதில் 7 லட்சம் பேர்களுக்கு வீடுகளை கட்டிக்கொடுக்கக் கூடிய சூழ்நிலை இருக்கிறது. ஆனால் அந்தத் தொகையைக் கொண்டு அனைத்து ஆதிதிராவிட மக்களுக்கும் வீடுகளைக் கட்டிக்கொடுப்பது என்பது அதிக காலவிரயத்தை ஏற்படுத்தும் என்ற உணர்வோடுதான் இந்தத் திட்டத்தை தொடர்ந்து செயல்படுத்துவதா அல்லது ஸ்டேட் ஹவுசிங் ஸ்கீம் மூலமாக செயல்படுத்துவதா என்பது குறித்து, கருத்து அறிதல் பொருட்டு மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குக் கோப்பு அனுப்பப்பட்டிருக்கிறது. அரசு அதை ஆராய்ந்து விரைவில் ஆணைகள் பிறப்பிக்கும்.

திரு. க. பரமலை : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரிசன வீட்டு வசதி வளர்ச்சிக் கழகத்தின் சார்பில் வீடுகளைக் கட்டுவதற்கு அரசு புறம்போக்கு நிலங்கள் அல்லது அரிசன நல இலாகாவால் ஆர்ஜிதம் செய்யப்பட்ட நிலங்கள் இவைகளில் ஏதாவது தேர்ந்து எடுத்து கட்டப்படும் என்று அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். ஆனால் தனியார்களிடமிருந்து கையகப்படுத்தப்பட்டு ஆர்ஜிதம் செய்யப்பட்ட நிலங்களில் பட்டாக்கள் வாங்கிதான் அவர்களுக்கு வீடு கட்டி கொடுக்க வேண்டும் என்று அரசு உத்தரவு இருக்கிறது. அது பற்றி அமைச்சர் அவர்கள் அறிவாரா? அல்லது அரசு புறம்போக்கு நிலங்களில் வீடுகளைக் கட்டலாம் என்று எப்பொழுது அரசு ஆணை இடப்பட்டிருக்கிறது? அதை அதிகாரிகள் ஒழுங்காக அமுல்நடத்த நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : பேரவைத் தலைவர் அவர்களே, என்னிடத்திலே தரப்பட்டிருக்கிற தகவல்களின் அடிப்படையில்தான் நான் பதில் அளித்துக் கொண்டிருக்கிறேன். அரசு புறம்போக்கு நிலங்களிலும், மற்றும் புறம்போக்கு நிலம் இல்லாத இடத்தில் இதற்காக கையகப்படுத்தப்பட்டு பட்டா வழங்கிய வீட்டு மனைகளில்தான் தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி வளர்ச்சிக் கழகத்திற்கு வீட்டு வசதிக்கான நிலம் அளிப்பது என்பது அரசின் கொள்கையாகும். அதன் அடிப்படையில் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு, நான் அதன் அடிப்படையில்தான் பதில் அளித்திருக்கிறேன்.

திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரிசன மக்களுக்கு இனாமாக வீடு கட்டிக்கொடுக்கிறபோது, ஏராளமான பண விரயமும் கால தாமதமும் ஏற்படும் என்று அமைச்சர் அவர்கள் பதில்

[1982 மார்ச் 1

சொன்னார்களே, அரிசன மக்களுக்கு வீடு கட்டி இனாமாகக் கொடுப்பது விரயம் என்று இந்த அரசு கருதுகிறதா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : நான் காலத்தைப் பற்றிதான் அப்படிக் குறிப்பிட்டுச் சொன்னேனே தவிர, பணத்தைப் பற்றியல்ல.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு :—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரி பார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

(2) தகவல் கோரல்.

(அ) பேரவை கூடும்போது அரசின் திட்டங்கள் பற்றி முன்கூட்டியே வெளியில் அறிவிப்பது.

திரு. ப. பொன்னுரங்கம் : தலைவர் அவர்களே, இப்பொழுது சட்டமன்றம் நடந்து கொண்டிருக்கிறது. நிதி நிலை அறிக்கையின் மீது முதலாவது நாளாக விவாதத்தைத் தொடங்கயிருக்கிறோம். அது மட்டும் அல்ல பல மானியக் கோரிக்கைகளுக்கும் தேதிகளை நிர்ணயம் செய்திருக்கிறோம். இந்தச் சூழ்நிலையில் முதலமைச்சர் அவர்கள் கூட வெளியில் பேசும் போது, 100 கோடி ரூபாய் திட்டத்தைப் பற்றி பேசும் போது—

I cannot go into the details of the scheme as the Assembly is in session.

என்று சொல்லியிருக்கிறார்கள். இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையிலே வந்திருக்கிறது. ஆனால் தென்னாற்காடு மாவட்டத்தில், கடலூர் பக்கத்தில் மீனவர்களுக்காக 482 வீடுகள் கட்டப்படும் என்று நிதியமைச்சர் அவர்கள் திட்டவட்டமாக அறிவிப்புத் தருகிறார். இது முறைதானா? சரிதானா? நேற்றுகூட டி.வி.-யிலே இதுபற்றி செய்தியிலே சொல்லப்பட்டிருக்கிறது. சபை நடக்கிற இந்த நேரத்திலே சபைக்குத் தெரிவிப்பதற்கு முன்பு வெளியிலே சொல்வது சரியா ? இதை நியாயமாக உரிமை மீறல் பிரச்னையில் கொண்டு வர வேண்டும். ஒழுங்குப் பிரச்னை என்ற வகையிலாவது அவர்கள் இதற்குப் பதில் அளிக்க வேண்டும் என்று தலைவர் அவர்களே, உங்கள் மூலமாக கேட்டுக்கொள்கிறேன்.